# நான் தேடும் நோக்கங்களை

நான் தேடும் நோக்கங்களை யேசுவிடம் கண்டு கொண்டேன்
நான் வாழும் நாளெல்லாம் அவரின் சொந்தமாய் வாழ்ந்திருப்பேன் இன்
நாள் எனைத் தந்தேன் ( 2 )

**1)**
தாயின் வயிற்றில் இருந்த போதே என்னை அன்று அவர் நினைத்தார்
சேயாய் நானும் பிறந்த போதே அன்பால் முழுதும் என்னை நிறைத்தார்(2)
என்னென்று நான் சொல்லுவேன் என் இதயத்தை தந்து விட்டேன் ( 2 )
பிளவு படாத நெஞ்சத்துடன் இனி நான் வாழ்ந்திருப்பேன்- ( 2 )

**2)**
ஏழையோர்க்கு நற்செய்தி சொல்ல யேசு இன்று எனை அழைத்தார்
பகிர்ந்து வாழும் பண்பைக் காட்ட பாரில் என்னை அவர் குறித்தார் ( 2 )
என்னென்று நான் சொல்லுவேன் என் எல்லாமே தந்து விட்டேன் ( 2 )
ஏதுமில்லாதவர் தோழமையில் இனி நான் வாழ்ந்திருப்பேன்

**3)**
இணைந்து வாழும் மானிடர் தம்மில் யேசு வந்து குடியிருப்பார்
பணிந்து ஆற்றும் சேவை தன்னில்பரமனரசு அவர் அமைப்பார் ( 2 )
என்னென்று நான் சொல்லுவேன் என் பங்குரிமை தந்து விட்டேன் ( 2 )
இறையுளம் தானே பெரிதென்று இனி நான் வாழ்ந்திருப்பேன்